**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.13/2023 – PW-1**

| | |
|---|---|
| Name | திரு.ரகுபதி |
| Father Name | திரு.ஆறுமுகம் |
| Aadhar Card No. | 5414 7936 0149 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **09.03.2026.**

**2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் மாட்டுப்பண்ணை வைத்துள்ளேன். நிலங்கள் வாங்கி விற்கும் தொழிலும் செய்து வருகிறேன். நான் மாட்டுப்பண்ணை வைத்துள்ளதாகவும், நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருவதாகவும் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மாதம் ரூ.50,000–ரூ.75,000/– வரை வருமானம் கிடைக்கும். நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ததில்லை. உண்மையிலேயே எனக்கு அவ்வளவு மாத வருமானம் வரும் என்றால் வருமான வரி செலுத்தியிருந்திருப்பேன் என்றாலும், எனக்கு அந்த அளவிற்கு வருமானம் கிடையாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 பொது அதிகார ஆவணம் 07.05.2021–ம் தேதி சுனிதா என்பவர் அம்பேத்ராஜ் என்பவருக்கு எழுதிக் கொடுத்திருந்தார். அம்பேத்ராஜ் என்பவர் 1–ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் கிரைய ஒப்பந்தம் செய்த கட்டிடத்தின் வயது சுமார் 20 ஆண்டுகள் இருக்கும். அந்த இடத்தின் விஸ்தீரணம் 30–க்கு 50 ஆகும். அந்த கட்டிடத்தின் அளவு தோராயமாக 10 சதுரம் இருக்கும். மேலே மாடியில் சிமெண்ட் வேயப்பட்ட ஓடு உள்ள ஒரு அறை உள்ளது. நான் உண்மையிலேயே அந்த சொத்தை வாங்க எண்ணம் இருந்திருந்தால் அந்த கட்டிடத்தின் சரியான அளவை சொல்லியிருப்பேன் என்றால் தவறு. வா.சா.ஆ.1 பொது அதிகார ஆவணத்தில் 4–வது பக்கத்தில் சொத்து சம்மந்தமான சகல வரவு செலவு கணக்குகளை 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு ஒப்படைக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் படி 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு கணக்குகள் கொடுத்தாரா என்றால் கணக்குகள் கொடுத்துவிட்டதாக 1–ம் பிரதிவாதி என்னிடம் சொன்னார். 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு கணக்கு வழக்குகள் கொடுக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(2-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.